(3) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : 1977ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8 ஆம் தேதி அன்றைய அலுவல் ஆய்வுக் குழுவின் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு மேலவை நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப் பட்டுள்ளது என்பதை அறிவித்துக்கொள்கிறேன் :—

9—7—1977	சனிக்கிழமை ..	அரசின் சட்ட முன்வடிவு, ஆளுநர் உரை மீது விவாதம்.
10—7—1977	ஞாயிற்றுக்கிழமை..	விடுமுறை
11—7—1977	திங்கட்கிழமை ..	ஆளுநர் உரையின்மீது விவாதம்.
12—7—1977	செவ்வாய்க்கிழமை	
13—7—1977	புதன்கிழமை ..	
14—7—1977	வியாழக்கிழமை..	

மேலவை பிற்பகல் 4 மணி முதல் 7 மணி வரை கூடும்.

(4) ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்களுக்குக் கடைசி நாள்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கான திருத்தங்கள், 1977 ஜூலை 11-ம் நாள், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(5) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பப்பட்டுள்ள, தமிழ்நாடு 1977-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்களின் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவின் (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 1/1977) பிரதி ஒன்று மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.